padippakam

# மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்

(தமிழக அரசின் பரிசு பெற்ற நூலின் ஒரு பகுதி)

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

சந்திரிகா சோமசுந்தரம்

பெண் கல்வி நிலைய வெளியீடு - இல. 29
37, கின்ரோஸ் வீதி,
கொழும்பு-4.
இலங்கை.

படிப்பகம்

padippakam

முதற்பதிப்பு : செப்டம்பர் 1990
First Edition: September 1990

## Mass Media and Women

This booklet outlines briefly the image of women that is created by the mass media as a saleable commodity - In short, the author describes the many faces of the women which is far removed from reality.

விலை : ரூ. 10/-
Price : Rs. 10/-

Publishers :

WOMEN EDUCATION CENTER PUBLICATION - No. 29
37, Kinross Avenue,
Colombo-4.
Sri Lanka.

Printed by :

The Kumaran Press,
201, Dam Street,
Colombb-12.

படிப்பகம்

padippakam

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

# முன்னுரை

## உங்களுடன் உரிமையுடன்

''பெண்ணடிமைத் தீரும் மட்டும் பேசுந்திரு நாட்டில்
மண்ணடிமைத் தீருவது முயற்கொம்பே''

என்றான் பாரதிதாசன்

'பெண் விடுதலை' என்பது ஒரு பால் அடிப்படையிலான ஒரு வர்க்கத்தின் விடுதலை மட்டுமன்று. அது அந்த மண்ணின் விடுதலை. அங்கு வாழும் மனிதர்களின் விடுதலை. அவர்களின் மனங்களின் விடுதலை மனித நேயத்தின் விடுதலை. மானி த்தின் விடுதலை, அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார விடுதலை என்று சொல்வதில் தவறில்லை. ஏனென்றால் இந்த உலகத்தின் மகத்தான சக்தியே பெண்தான். பெண்ணைச் சுற்றித்தான் அனைத்து அம்சங்களும் விதிமுறைகளுக்குள் கட்டமிடப்பட்டு காவல் வைக்கப்பட்டுள்ளன.

நமது சமுதாயம் ஆண், பெண் இருபாலாரையும் கொண்டிருந்தாலும்கூட உரிமைகளும், வாய்ப்புகளும் இரு தரப்பினருக்கும் சமத்துவமாகப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை என்பதே உண்மை. சமுதாயத்தின் இரு அடிப்படை அம்சங்களுக்கிடையேயே இந்த பாகுபாடு இருக்கும் பட்சத்தில் அவற்றின் அடிப்படைகளைச் சார்ந்து எழுப்பப்பட்டுள்ள சமுதாய அமைப்பிலும், தேவைகளிலும் என்ன விதமான நேர்மையை நாம் எதிர்பார்க்க முடியும்?

காலம் காலமாக பெண்ணினம் அடிமைப்படுத்தப்பட்டே வந்துள்ளது என்பது கண்கூடு. உடலியல், சுற்றுப்புற, சமுதாய, அரசியல், வரலாற்றுக் காரணங்களால் பெண்களுக்கு மனித வாழ்வின் சமத்துவமான பங்கை அளிப்பது தடுக்கப்பட்டே வந்துள்ளது.



படிப்பகம்

padippakam

வேதனைக்குரியதும், வெட்கப்படக் கூடியதுமான இந்த அவல நிலையில் ஆண் அடக்குமுறையின் விகிதாச்சாரம் வித்தியாசப்பட்டிருக்கலாமே தவிர உலகெங்கிலும் உள்ள பெண்களின் உண்மை நிலை இதுதான் என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இந்த நிலை நாகரிகத்தில் நிமிர்ந்து நிற்கும் மேலாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

பெண்கள் என்றாலே பலவீனமானவர்கள் என்றும், அவர்களின் அழகு, கவர்ச்சி, இளமை, உணர்ச்சி, மனோபாவம் அனைத்துமே உலக அரங்கிலும் சமுதாய அந்தஸ்திலும் ஆண்களை விட ஒருபடி குறைவான நிலைக்குரியதாகவே கருதப்படுகின்றன.

நமது மகாத்மா காந்தியடிகள் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் போது "ஆணும் பெண்ணும் சமுதாயத்தில் ஒன்றையொன்று மிகை நிரப்பும் அங்கங்களாகின்றனர்! ஒருவருக்கொருவர் ஆதாரமாக இருப்பதனால் ஒருவரின்றி மற்றவர் வாழ்வதென்பது இல்லை என்ற நிலைமையை உருவாக்கிக் காட்டியவர்கள். எனவே இவர்களுள் ஒருவரின் அந்தஸ்தை பாதிக்கும் எந்தவொன்றும் இரண்டு வர்க்கத்தினரையும் முற்றாக அழித்து விடும் என்பதை நாம் உணர்வது அவசியமாகும்'' என்று தெளிவு படுத்தியிருக்கிறார்.

சமுதாயத்தில் பெண்களின் நிலையானது வகிக்கும் பங்கை உணர்த்த இவையே போதுமானவையாகும். ஆனால் சமுதாயத்தில் பெண்களின் பிரதான பங்கு நல்ல மனைவியாகவும், சிறந்த தாயாகவும் விளங்குவதே என்று பலரால் தவறாக கணிக்கப்பட்டுள்ளது. ஆணுக்கு அடங்கி நடப்பதும், சுயநிர்ணயத்துடன் செயற்பட முடியாததுமே பெண்களின் தகுதிகள் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை பெண் என்பவள் மூன்று விதகால கட்டங்களில் மூன்று வித கட்டுப்பாடுகளுக்குள் விலங்கிடப்படுகிறாள். திருமணமாகும்வரை பெற்றோருக்கும், திருமணத்தின்பின் கணவனுக்கும், கணவன் மறைந்துவிட்டால் தன் மகனுக்கும் கட்டுப்பட்டவளாகவே அவள் வாழ்க்கைச் சக்கரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது! எப்போதுமே பெண் இன்னொருவரில் குறிப்பாக ஆண்மகன் ஒருவரில் தங்கியிருப்பவளாகவே நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறாள். தவிர பெண்களே பெண்களை அடக்கியாளும் கொடுமையும் நமது சமூகத்தில் நிலவும் இன்னொருவிதமான அடக்குமுறையாகும். மாமியார் மருமகள் பிணக்குகளைத்தவிர தாயே தன் மகளின் சுதந்திரத்துக்கு குறுக்கே நிற்கும் சம்பவங்களும் உள்ளன. இதற்கு கார



படிப்பகம்

padippakam

ணம் கல்வியறிவு குறைவினால் ஏற்பட்ட குறைபாடும் கூட டுப்புழுக் களாக ஒரு வட்டத்துக்குள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட தவறான முறையுமேயாகும்.

தந்தையை ஆதாரமாகக்கொண்ட சமுதாய அமைப்பு (Patriarchial Structure) ஆழமாக வேரூன்றியிருப்பதனாலேயே தாயின் தரம் நிலைதடுமாறியுள்ளது. ஆண்கள் மேம்பட்டவர்களாக வும், பெண்கள் அவர்களுக்குட்பட்டவர்களாகவும் கருதப்படும் அடிப் படைக்கு காரணம் இந்த வாழ்க்கை முறையே.

இந்த நிலை நிரந்தரமானதா என்றால் 'இல்லை' யென்றே கூறலாம். காரணம் மனித குலத் தோற்றத்தின் போதே இந்த வேறுபாடுகள் தோன்றியவையல்ல. ஆணும் பெண்ணும் அங்க வேறுபாடு தவிர வேறொன்றினாலும் வித்தியாசப்படவில்லை, காலம் காலமாக மனிதகுல முன்னேற்றம் மாற்றியமைத்த பல அம் சங்களில் ஆணாதிக்கமும் பெண்ணடிமையும் வேகமாக வளர்க்கப்பட் டுள்ளவையாகும்.

இடையில் உருவான சில வாழ்க்கை முறைகளும், சமுதாய அமைப்புகளும், உருவாக்கப்பட்ட சில வாழ்க்கை நெறிகளும் பெண்களுக்கு புதிய வேலைகளை இட்டு அவர்களை காவலுக்குரிய வர்களாக்கின. இதனால் மனிதன் சொந்தம்கொண்டாடும் அசை யும், அசையாப் பொருட்களின் வரிசையில் பெண்ணும் அடக்கப் பட்டாள். பெண் எப்போது சொந்தம் கொண்டாடப்பட்டாளோ அப்போதே அவளது சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது.

பெண் என்பவள் சராசரி மனித உணர்வுகளைக்கூட சுயமாக வெளிப்படுத்த முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டாள். தன் எண்ணம், செயல், வாழ்வு அனைத்துமே பெற்றோரையோ, கணவ னையோ சார்ந்திருக்கும் ஒன்றாக கருதப்படும் நிலைக்கு நிர்ப்பந் திக்கப்பட்டாள். சொல்லப்போனால் தன்னால் சுயமாக வாழவோ, சுயமாக சிந்திக்கவோ முடியாது என்ற மனநிலைக்கு பெண்ணினம் தள்ளப்பட்டது.

இன்ன தொழில்கள்தான் பெண்களுக்குரியவை என்று பெண் களே நினைக்கக் கூடிய அளவு தொழிற்பாகுபாடு நிலை நிறுத்தப் பட்டது. கல்வியறிவிலும், பிற கலைகளைக் கற்பதிலும்கூட பெண் களுக்குரியவையென ஒருசில வாழ்வை வரையறுத்து அவர்களின் அறிவுக்கு வேலி போடப்பட்டது. இதனால் பெண்களின் ஆற்றல் வெளியுலகத்துக்கு தெரியாத அளவுக்கு மூடிவைக்கப்பட்டே இருந்தது.



படிப்பகம்

padippakam

ஆனால் காலமாற்றத்தை எதிர்த்து நிற்க எந்த சக்தியால்தான் முடியும்? மேனாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளும், சமுதாய மாற்றங்களை உருவாக்கின. இந்த மாற்றங்களுடன் சமுதாய மறுமலர்ச்சியை விரும்பி வரவேற்ற தலைமைத்துவங்கள், சமூக மேம்பாட்டாளர்களின் பெருமுயற்சிகள் இணைந்து பெண்களுக்கு இடப்பட்ட விலங்குகளை உடைத்தெறிய முயற்சி செய்தன.

அந்த முயற்சியின் பயனாகசமுதாய கட்டுப்பாடுகளையும், மூட நம்பிக்கை முட் புதர்களையும் விலக்கி தம்மை தேசிய நீரோட்டத்துடன் சமுதாய வாழ்வுடன் இணைத்துக் கொள்ள பெண்களில் சிலர் விரும்பி முன்வந்தனர். தமது அறிவையும் ஆற்றலையும் உணர்ந்து அவற்றை வீணாக்க விரும்பாது தாமும் ஆண்களுக்கு அறிவினால் இளைத்தவர்கள் அல்லர் என்று நிரூபிப்பதற்காக அவர்கள் அடியெடுத்து வைத்தனர்.

அந்த அடிப்படையினைப் பின்பற்றி சமுதாய சூழல் ஒருவித மாற்றத்தை உணர ஆரம்பித்தது. இந்த போராட்டமான மாற்றத்தில் ஒருசில பெண்கள் மட்டுமே வெற்றி பெற்றாலும் கூட மேலும் மேலும் பெண்கள் இந்தப் பாதையைப் பின்பற்றி தம்மை வெளிக் கொண்டுவர விரும்பினார்கள். இது ஒரு சமுதாய புரட்சிக்கு வித்திட்டது. சமுதாயம் என்பதே மாற்றத்துக்குட்படக்கூடிய ஒன்றுதானே?

சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்பிய பெண்கள் கூட்டத்தின் எண்ணிக்கை அதிகரித்தது. இந்த ஆர்வமும் அவர்களுக்குள் இயல்பாகவே ஒழிந்து கிடந்த ஆற்றலும் இணைந்து பல புதிய பாதைகளை பெண்களுக்கு காட்டத் தொடங்கின.

பெண்கள் கல்வியிலும், அறிவியல், அரசியல், தொழில் மற்றும் நவயுகப் பாதைகளிலும் நடைபோடத் தொடங்கினர். இந்த மாற்றம் உலகெங்கிலும் உள்ள பெண்களை எட்டத் தொடங்கின. தமிழ்ப் பெண்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கானவர்களா? முந்தானைக்குள் முகம் மறைத்து இருக்க கடமைப்பட்டவர்களே என்று எண்ணியிருந்தவர்கள் தங்கள் குறுகிய வட்டத்தை விட்டு வெளிவரத் தொடங்கினர். ஆரம்ப காலத்தில் இவர்கள் முயற்சிக்கு எதிராக பல தடைகள் ஏற்பட்டாலும் கூட தமிழகப் பெண்கள் தங்கள் பரிமாணங்களை விசாலப்படுத்திக் கொண்டுள்ளது உண்மை.

அதன் விளைவுதான் இன்று தமிழகத்தில் ஐ. ஏ. எஸ். ஐ. பி. எஸ். அதிகாரிகளாகவும், நீதிபதி, அரசியல்வாதிகள், பாராளுமன்ற



படிப்பகம்

padippakam

உற்ப்பினர்கள், விமான ஓட்டிகள் என்று வித்தியாசமான பணிகளில் துணிந்து இறங்க காரணமாகியுள்ளனர். இத்தகைய மாற்றங்கள் உண்மையிலேயே பாராட்டுதற்குரியன. ஆனால் தமிழகம் கண்டுள்ள இந்த வளர்ச்சியையும் மீறி பல விரும்பத்தகாத பெண்ணுலக வீழ்ச்சியும் இங்குதான் நிகழ்கின்றன.

உதாரணமாக இத்தனை ஆண்டுகால வளர்ச்சியையும் மீறி விபசாரம் என்ற மாபெரும் சமூகக் கேடு பெண்கள் மத்தியில் நிலவுவது நமக்கு எதைச் சுட்டிக்காட்டுகின்றது. பெண்களுக்கு சம்பாதிப்பதற்கு உடலைத் தவிர வேறு முதலீடு இல்லை'என்ற நிலைமை மாறவில்லை என்பதைத் தானே உணர்த்துகிறது. வாய் வலிக்க பல மேடைகளில் பேசியும் வரதட்சணை கொடுமை இன்னும் ஒழிந்தபாடில்லை. வாழ வந்த பெண்ணை அக்கினிக்கு பலியாக்கும் துர்க்குணம் நமது பெண்களிடம்தான் கொட்டிக் கிடக்கிறது. மனைவி என்பவள் தனது சொத்து எனவும், அவள் தனக்கு அடங்கியும், தன்னைப் பின்பற்றியுமே நடக்கவேண்டும் என்ற முரட்டு மனப்பான்மையோடு நமது ஆடவர் நடந்துகொள்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக திருமணமே தமது வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் எனவும், சமுதாயத்தில் தனக்கு வேறொரு பணியில்லை என்றும் எண்ணிக்கொண்டு இதுவரை இருந்துவந்துள்ள வட்டத்தை விட்டு வெளிவராமல் வாழும் பெண்களே அதிகமாக உள்ளனர். அவர்களால் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை எட்டிப் பார்க்க முடியவில்லை என்பதை விட அத்தகைய ஒரு சூழ்நிலைக்கு அவர்கள் தம்மை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

இப்படி சமுதாயத்தில் பெண்கள் நிலை ஒருபுறம் மேம்பட்டுக் கொண்டு செல்ல மறுபுறம் பெண்கள் பிடிவாதமாக தங்கள் நிலைமைகளை மாற்றிக்கொள்ள மறுக்கும் அவல நிலை நிலவத்தான் செய்கிறது. இந்த மாதிரியான சூழ்நிலையில் தமிழக சமுதாயத்தில் பெண்களின் நிலை எப்படி இருக்கிறது என்ற கேள்விக்கும் அதன் சார்பாக மக்கள் தொடர்பு சாதனங்களைக் கொண்டு தொடங்கப்பட்ட ஆய்வொன்றின் பலனாகவும் கிடைத்த பதில்களின் அடிப்படையிலேயே அடுத்து வரும் அத்தியாயங்கள் தொடர்கின்றன.

இலக்கியங்கள் சமுதாயத்தை பிரதிபலிக்கும் அம்சங்கள் ஆகும். இந்த அடிப்படையில் இலக்கியங்களின் வெளி நீட்டமாக கருதப்படும் வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் பெண்கள் தொடர்பாக காட்டும் பிரதிபலிப்பு ஆய்வின் அடிப்படை அம்சமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.



படிப்பகம்

padippakam

சமுதாயத்தை சிறப்பாக எடுத்துக்காட்டுவதில் மிகவும் சக்தி வாய்ந்தவை மக்கள் தொடர்பு ஊடகங்கள் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஊடகங்கள் சமுதாயத்தை நெறிப்படுத்துவதிலும், சமுதாயத்துக்கு வழிகாட்டுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. தவிர இந்த ஊடகங்களில் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமும் மிக அதிகமானதே. இந்த முக்கியத்துவம் எந்தவிதமான மாற்றங்களை பெண்களின் சமூக நிலைமையில் அறிமுகப்படுத்தியுள்ளன என்பதும் ஆய்வின் ஓர் அங்கமாகும். இவ் ஊடகங்களில் பெண்கள் எவ்வகையில் பொதுஜனங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். இனிமேல் எந்த விதத்தில் பெண்கள் அறிமுகப்படுத்தப்பட்டால் அவர்களின் நிலைமை மேம்படும் போன்ற அம்சங்களும் ஆராயப்படுகின்றன.

'சர்வதேச பெண்கள் தசாப்தமா'க (International Women's Decade) பிரகடனப்படுத்தப்பட்ட 1975–1985க்கு இடைப்பட்ட காலத்திலேயே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனென்றால் இக் காலகட்டத்திலேயே பெண்கள் தொடர்பான ஒரு விழிப்புணர்வு சர்வதேச அளவிலேதானறிபெண்கள்சகாப்தம் அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக பல திட்ட அமுலாக்கல் பற்றிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த தசாப்த கால இறுதியில் இத்தகைய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் சர்வதேச அளவிலான முயற்சிகள் எத்தகைய பலாபலன்களை கொண்டு வந்துள்ளன என்பதை அறியவும் வாய்ப்புகள் உள்ளன. அதே காலகட்டத்தில் தான் பெண் விடுதலைக்காகவும், பெண்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் பல பெண்ணுரிமைவாதிகள் தோன்றியுள்ளனர். அத்தகைய பெண்ணுரிமைவாதிகள் மட்டுமன்றி அவர்களின் இயக்கங்கள் கூட எதைச் சாதித்துள்ளன என்பதற்கு இந்த ஆய்வு ஒரு அளவுகோலாக அமையும் என்றால் தவறில்லை. ஏனெனில் வெகுஜன ஊடகங்களில் காணப்படும் பெண்கள் தொடர்பான அம்சங்கள் நாம் எங்கே நிற்கிறோம் என்பதை தெளிவுறுத்திவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

பெண்களின் சமூக நிலைமை குறித்து பல ஆய்வுகள் இதுவரை வெளி வந்துள்ளன. ஆனால் இந்தக் குறிப்பிட்ட ஆய்வு குறிப்பாக வெகுஜனத் தொடர்பு ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு அதுவும் சிறப்பாக அச்சிட்டு வெளிவருவனவற்றில் பெண்கள் ஈடுபாடு கொண்டுள்ளதும் பெண்கள் விஷயங்களில் ஈடுபாடுடையதுமான வாராந்தரிகளை அடிப்படையாகக் கொண்டு பெண்களின் நிலையை



படிப்பகம்

padippakam

நிர்ணயிக்க முயன்றுள்ளது. இதற்கு காரணம் அச்சில் வெளிவரும் பத்திரிகைகளில் வாராந்தரிகளே அதிக விற்பனையுடையன என்பதாகும்.

இந்த முயற்சி பெண்களுக்கு முழுமையான .ஒரு வெற்றியை பெற்று தரா விட்டாலும் கூட குறைகளையும் நிறைகளையும் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பை பெற்றுத்தரும் என்பது உறுதி. தவிர மகளிர் மேம்பாட்டில் அக்கறையுள்ள எவரும் இனி அவர்கள் ·செய்ய வேண்டியதையும் இது கோடிட்டுக் காட்டி நிற்கும் என்பது நிச்சயம்.

இத்தனைக் காலம் தான் உறங்கிக் கிடந்தோம். இனியாவது விழித்தெழுந்து செயல்படுவோம் என்ற ஒரு முனைப்பின் பயனாகவே இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்கும் பெண்ணினத்தை ஒன்று திரட்ட முடியாவிட்டாலும் கூட அவர்களை உசுப்பி விட இது ஒரு சந்தர்ப்பம் எனக்கருதியே இந் நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இனி வரும் அத்தியாயங்கள் எடுத்துக்கூறும் உண்மைகள், நிலை நாட்டும் கருத்துக்கள், சொல்ல விரும்பும் ஆலோசனைகள், மகளிர் மேம்பாட்டுக்கும், சமுதாயத்தில் எதையும் சாதிக்கவல்ல மக்கள் தொடர்பு ஊடகங்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக அதனால் மகளிர் சமுதாயத்துக்கும் எந்த மாற்றத்தையாவது அறிமுகப்படுத்தினால் அதுவே இந்நூலின் சாதனையாகும்.

சந்திரிகா சோமசுந்தரம்



படிப்பகம்

padippakam

# எங்கே நிற்கிறோம்?

சமுதாயத்தின் மிகச் சக்தி வாய்ந்த பகுதியான பெண்ணினம் காலம் தோறும் மாற்றங்களைக் கண்டு வந்திருக்கிறது. அதுவும் இந்தியப் பெண்கள் கலாசார, பண்பாட்டு சமூக வரம்புகளுக்குள் கட்டுப்பட்டு மாற்றங்களை அனுபவித்து வந்திருக்கின்றனர். இவர்களுள் தமிழ்ப் பெண்களின் வளர்ச்சி எப்போதும் சமுதாயச் சார்புடையதாகவே இருந்து வந்திருக்கின்றது இந்த மாற்றங்களின் அடிப்படையிலேயே தமிழ்நாட்டுப் பெண்களின் நிலையும், மேம்பாடும், பங்கும் கூட மாறுபட்டு வந்திருக்கின்றன.

எனவே அவர்களின் நிலை, மேம்பாடு, பங்கு பற்றி புரிந்து கொள்வதற்கு முன் காலபதோறும் சமுதாயத்தில் அவர்களின் நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். அப்படித் தெரிந்து கொள்வதன் மூலம் தற்போது அவர்களின் அந்தஸ்து எந்த அளவில் உள்ளது என்பதை அளவிட்டுக் கொள்ள முடியும். இந்தியப் பெண்களின் நிலை பற்றியும், அதனைச் சார்ந்துள்ள தமிழ்பெண்களின் நிலை பற்றியும் தகுந்த அறிவைப்பெற இந்த பின்னணி பெரிதும் பயன் தரும் என்பதில் சந்தேகமில்லை'

இதுவரை நமது சமுதாயத்தில் பெண்களின் நிலைமை திருப்திகரமாக இருந்திருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். எந்த அளவுக்கு மகளிர் வளர்ச்சி உச்சமடைந்துள்ளதோ மறுபுறம் அதே அளவுக்கு வீழ்ச்சியும் வேறு பரிமாணங்களில் காணப்பட்டிருக்கின்றது என்பதே உண்மை.

வேதகாலம்தொட்டு பெண்கள் நிலைமை இன்றுபோல ஆணுக்கடங்கியதாகக் கருதப்பட்டதா என்றால் இல்லை என்று உறுதியாகக் கூறலாம். தந்தையைச் சார்ந்த (Patriarchial Society) குடும்ப அமைப்பைக் காணக்கூடிய வேதகால சமுதாயத்திலேகூட பெண்களின் நிலைமை மிக உயர்ந்த நிலையில் இருந்ததற்கு சான்றுகள் உள்ள



படிப்பகம்

padippakam

தாக அறியப்பட்டுள்ளது. இதுபோலவே சங்க காலத்திலும் மகளிர் நிலை மேம்பட்டதாக இருந்திருப்பதை சங்ககாலப் பாடல்களின் வாயிலாக அறிய முடிகிறது. மனைவி என்பவள் கணவனுக்கு உதவியாக இருப்பவளாகவும், நண்பனாகவும், அவனது அனைத்து செயல்களிலும் ஈடுபாடு காட்டும் துணையாகவும், அவனது அனைத்து நன்மைகளில் பங்கெடுத்துக்கொள்பவளாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் இந்தச் சுதந்திரம் ஆரிய கலாச்சார ஊடுருவலால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆணின் அசையும் அசையாச் சொத்துக்களில் பெண்ணும் ஓர் உடைமைப் பொருளாகவே வகைப்படுத்தப்பட்டிருக்கிறாள், இதையே மனுவின் வார்த்தைகளான,

'அவள் தனது இல்லத்தில்கூட தனித்தியங்கி எதையும் செய்தல் கூடாது. இளமையில் தந்தைக்கும் வாலிபத்தில் கணவனுக்கும் விதவையானால் புத்திரனுக்கும் கட்டுப்பட்டு சுதந்திரத்தை மறந்து வாழவேண்டும்' என்பவை வலியுறுத்துகின்றன.

புராண காலத்து சமுதாயமும், மதமும் பெண்களுக்கு ஒற்றை நோக்குடைய வாழ்க்கையையே நிர்ணயித்துள்ளன. அந்த நோக்கு 'நீண்டகால குடும்ப வாழ்க்கை' ஒன்றாகவே இருந்துள்ளது. இதற்கு துணை போவதாகவே அக்கால மரபுகளுக்குட்பட்ட சதி, பர்தா, பால்ய விவாகம் ஆகிய சடங்குகளும் ஒத்துப் போயிருக்கின்றன. புராண காலத்துக்குப் பிந்தியதாக அமைந்த முஸ்லீம் தலையீடும் பெண்களின் நிலைமையை மாற்றவில்லை. மாறாக அவர்களின் மதம் சார்ந்த நம்பிக்கைகளும், பெண்கள் தொடர்பான எண்ணங்களும் மேலும் பெண்கள் நிலைமையை பின்தள்ளியே வந்திருக்கின்றன. இந்நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தொடர்ந்திருக்கிறது என்பதையும் சரித்திரம் உணர்த்தி நிற்கின்றது. தொடர்ந்து வந்த பிரிட்டிஷ் ஆதிக்கமும் அதே நிலைமை நீடிக்க வழி செய்ததுடன் மட்டும் நிற்காமல், பெண்ணினத்தின் சுதந்திர உணர்வுகளையும், தாகத்தையும், மனப்பான்மையையும் கூட முடக்கிப் போட்டது.

பெண்கள் முழுச் சுதந்திரத்தை பெறுவதற்கு அவர்கள் தாங்கள் ஆளுமைக்குட்படுத்தப்படுவதையும், சமுதாயத்தில் தாம் சாதிக்கக் கூடியவற்றையும் உணர்வது அவசியம். இதற்கு நவீன சமூக பொருளாதார மேம்பாட்டு அடிப்படையிலான கருதுகோள்களைக் கொண்ட சமுதாயத்தை, ஜனநாயக அடிப்படையில் உருவாக்குவது தேவையாகிறது இத்தகைய ஒரு சூழ்நிலையையும், கொள்கையையும் உருவாக்குவதற்கு இந்தியாவில் பிரித்தானியர்கள் ஆதிக்கம் வழி வகுத்



படிப்பகம்

padippakam

ததும் உண்மை. ஏனெனில் ஆணும் பெண்ணும் சமமாக நடமாடும் பண்பாடும், பழக்கமும் தமிழ்நாட்டு ஒரு கலாச்சாரப் பாதிப்பை உண்டு பண்ணியது. குறிப்பாக சமுதாயத்தில் இந்துப் பெண்களின் நிலைமையில் இது ஒரு மாற்றத்தை அறிமுகப்படுத்தியது.

பகுத்தறிவுக் கொள்கைகள் தனிமனிதர்களைக்கூட தங்கள் தனித்துவத்திலிருந்து விலக்கிட, விடுபட வழிவகுத்தன. பெண்கள் விடுதலை பற்றி தீவிர அக்கறை கொண்டிருந்த ஜே. எஸ். மில் போன்றவர்களும்கூட இதற்கான நடவடிக்கைகளில் மிக அதிக ஈடுபாட்டுடன் இறங்கினர். அவர்கள் மிக்க தெளிவாக ஆண்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சமூக பாதுகாப்புகளும் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனர் அறிவுபூர்வமாக சிந்திக்கக்கூடிய இந்தியர்கள், சமுதாய சீர்திருத்தவாதிகள் என்ற வகையில் மேல்நாட்டு கருத்துக்களை ஏற்றுக்கொண்ட பலரும் இந்திய பெண்களின் சுதந்திரத்திற்கான அமைப்புக்களின் முன்னோடிகளாயினர். இதனால் சுதந்திர கொள்கைகளை இந்தியப் பெண்களின் நிலைமையுடன் இணைக்கும் பாலமாகவும் இவர்கள் தொழிற்பட்டனர்.

19ம் நூற்றாண்டுவரை இந்திய சமுதாயத்தில் பெண்கள் நிலை சீர்கெட்டிருந்தாலும் கூட பெண்கள் நிலை பற்றிய கொள்கைகளில் முன்னேற்றத்தை தூண்டிவிடும் தன்மையினதான சமுதாய உள்ளுணர்வு இந்தியா முழுவதையும் ஆட்கொண்டிருந்ததையும் காண முடிகிறது.

மதங்கள் வகுத்த வரைவிலக்கணங்களுக்குள் வாழ்ந்துகொண்டிருந்த பெண்களில் பௌத்த, ஜைனப் பெண்களின் சுதந்திரம் மட்டுமே பரவலாக்கப்பட்டது. இந்து மதம் பெண்களின் சுதந்திரத்தைப் பேணவில்லை என்று சொல்வதில் தவறில்லை.

19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய தேசிய மறுமலர்ச்சி இயக்கம் பெண்களை தனிப்பட்ட ஒரு இனமாக அடையாளம் காட்டியது. பெண்களை ஒரு தனிப்பட்ட ஒரு பிரிவாக மதித்து பழைய படி அவர்களுக்குரிய கௌரவத்தை வழங்கவும் முயன்றிருக்கின்றது. இவற்றுள் முதன்மையானது. திரு. ராஜாராம் மோகன்ராய் 1828 ஆம் ஆண்டில் வங்காளத்தில் உருவாக்கிய பிரம்ம சமாஜமாகும். பெண்ணுரிமைக்காகவும், அவர்களின் மறுமலர்ச்சிக்காகவும் பல முயற்சிகளை இவர் மேற்கொண்டார். அதில் வெற்றியும் கண்டார்.

அவற்றுள் குறிப்பாக 'சதி' எனப்படும் 'உடன்கட்டையேறும் வழக்கத்தை மாற்றுவதில் திரு. ராஜாராம் மோகன் ராய் ஆற்றிய



படிப்பகம்

padippakam

பங்கினை இந்திய நாடு என்றுமே மறக்கமுடியாது. பெண் கல்விக்கும், பெண்குல உயர்வுக்கும் இவர் ஆற்றியுள்ள சேவை அளப்பரியதாகும்.

இன்றுவரை பெண்குல உயர்வுக்கு ஊக்கமூட்டும் பல நிகழ்ச்சிகள் நடப்பதற்கு காரணமாக அமைந்தது அன்று தேச சுதந்திரத்துக்காக போராடிய தேசிய இயக்கமே என்றால் மிகையாகாது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த இயக்கத்தின் முயற்சிகளின் பலன்களில் ஒன்றாகவே பெண்களின் மனப்பான்மையில் இன்றுவரை ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கருதவேண்டும். இதனாலேயே இவர்களைச் சார்ந்த சமுதாய மாற்றங்களிலும் பெருமளவு மாற்றங்களை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு தேச பிதா காந்திக்கு பெண்கள் நன்றி கூறவேண்டும். அவர்தான் நடுத்தர வர்க்கப் பெண்களை அரசியல் ஈடுபாட்டின்பால் ஈர்த்து வெகுஜன இயக்கமாக தேசிய விடுதலை இயக்கத்தை மாற்றியமைத்த பெருமை படைத்தவர். இரண்டு விதமான எண்ணங்களை மாற்றி, ஆணுக்கு நிகராக பெண்ணும் அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கு வழிவகுத்தவர் மகாத்மா காந்தி. அதுவரை இத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்த பெண்கள் மகாத்மாவின் இந்த முயற்சியால் ஒரு புதிய திருப்பு முனையை சந்தித்தனர்.

'இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தருவதில் ஆண்களுக்கு இருக்ககூடிய அதே அளவு இணையான பங்கினை பெண்களும் பெற வேண்டும்' என்று மகாத்மா கூறியிருக்கிறார். அரசியல் இயக்கத்தின் கடைசிக் கட்டமான சாதிப் போராட்டம், பொருளாதார விடுதலை போன்ற அம்சங்கள் பெண் விடுதலைக்கும், பெண்கள் இயக்கங்களுக்கும் பெருமளவுக்கு வழிவகுத்தன. இது பெண்களின் வளர்ச்சிக்கு தூண்டுதலாக அமைந்தது.

எனவே பெண் விடுதலை பற்றி இந்தியத் திருநாட்டில் முதலில் சிந்தித்தவர்கள் ஆண்களே என்று உறுதியாகச் சொல்லலாம். படிப்பும், அறிவும் மிகுந்த பலர் தங்கள் சுதந்திரமான எண்ணங்களின் வெளிப்பாடாக பெண் சுதந்திரத்துக்கு ஊக்கமளித்து வந்தனர். இவர்களைத் தவிர பெண்கள் விழிப்புணர்விற்காக பல மாதர் குல திலகங்களும் பாடுபட்டிருக்கின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அன்னிபெசன்ட் அம்மையார், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, கமலாதேவி சட்டோபாத்தியா, ராணிலட்சுமிபாய் ராஜ்வத், ரஸ்டம்ஜி ஆகியோர். இவர்கள் காட்டிய ஆர்வமும் ஊக்கமும் காரணமாக இந்திய பெண்கள் சங்கம், அகில இந்



படிப்பகம்

padippakam

திய பெண்கள் மாநாட்டு அவை போன்ற பல பெண்கள் இயக்கங்கள் பெண்குல மேம்பாட்டுக்காக பாடுபடுவதற்காகத்தொடங்கப்பட்டன. இத்தகைய இயக்கங்கள் பெண்களின் நிலையை அனைத்து வழிகளிலும் மேம்படுத்துவதற்கான முறைகளையும் பலத்தையும் அளிக்க வல்ல பல பெண்களை உள்ளடக்கி இருந்தன,

அந்த காலகட்டத்தில், ஜனநாயக சூழ்நிலை, மனித குலத்துக்குரிய கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையில் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய பல ஜனநாயக உரிமைகளும் சமுதாய சுதந்திரமும் போராட்டங்கள் இல்லாமலேயே கிடைத்தன.

இவற்றுள் முக்கியமாக இந்திய அரசியல் சாசனத்தில் எழுத்து மூலமான சட்ட மூலங்கள் பெண்களுக்குரிய சமஉரிமை குறித்து இடம் பெற்றதை குறிப்பிட வேண்டும். சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் குறிப்பிடும் அத்தியாயத்தில் இதற்கென பல அம்சங்கள் சேர்க்கப் பட்டுள்ளன!

அதன் விளைவுதான் இன்று பெண்கள் பலவித தொழில்களையும், பதவிகளையும் அலங்கரித்து வருகின்றனர் என்றால் மிகையாகாது. இன்று பயிற்சியுடன் கூடிய பல தொழில்களில்(Skilled occu-pations) ஈடுபட்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கையும், மண மான பின்பும் தங்கள் தொழில்களை தொடர்ந்து வகிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதற்கும் காரணமானவை அரசியல் சாசனத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளே. இதற்கு காரணமாக அரசியல் சாசன வடிவமைப்புக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்திய நாட்டுப் பெண்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களே. இவர்களைத் தவிர அரசியல் மற்றும் பெண்கள் இயக்கங்கள் ஆகியவையும் மகளிர் மேம்பாட்டுக்கு வழிவகுப்பதில் அளப்பரிய பணியை ஆற்றியுள்ளன. ஐம்பதுகள் வரையிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்கும் நிலைமைகள் காணப்படவில்லை. இது தொடர்பான சட்டபூர்வமான பல முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிந்தபின் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒத்த அளவு வேலைக்கு ஒரே அளவு ஊதியம் வழங்கும் முறை அமுலுக்கு வந்தது.

இன்று தன்னுடைய பலத்தை உணரும் பல பெண்கள் குடும்பம் மட்டுமே 'தமது செயல் மையம்' (Centre of activity) இல்லை என்பதை உணரத் தொடங்கியுள்ளனர். தற்போது தொழில் துறையில் உலவும் பெண்களை மிகப் பெரிய சமுதாய மாற்றத்தில் ஒரு



படிப்பகம்

padippakam

மைல் கல்லாகவே கருத வேண்டும். இதை ஒரு பெண்ணின் நோக்கிலிருந்து கூறப்புகின் 'அவளது குறிக்கோளை விசாலப்படுத்திக் கொள்ளவும், நோக்கை பரந்துபடச் செய்யவும் அவளது சமுதாய தனித்துவத்தை பேணவும் இது உதவுகிறது என்றே கூறலாம். தவிர பெண்கள் அடையக்கூடிய பொருளாதாரச் சுதந்திரமானது அவர்களின் எண்ணங்கள், வாழ்க்கை மற்றும் சமுதாயச் சுதந்திரத்துக்கும் வழிகோலியுள்ளது.

இத்தகைய பொருளாதாரச் சுதந்திரம் பெறும் வரையில், தொழில் துறைகளில் ஈடுபடும் வரையில் வீட்டு வேலைகளைக் கவனிப்பதும், குழந்தைகளைப் பெற்று பராமரிப்பதுமே பெண்களின் தலையான கடமைகளாகக் கருதப்பட்டன.

இத்தகைய வரவேற்கத் தக்க வளர்ச்சிகளுடன் சில எதிர்மறை நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன' பெண்கள் சக்தியை விழிப்புணர்வு பெறச் செய்து சுதந்திர இயக்கத்தின் திசையில் திருப்பிய பின்னரும் கூட பெரும்பான்மையானோர் பழைய வாழ்க்கை முறைகளையே நாடிச் சென்றுள்ளனர். அத்துடன் அவர்களின் ஆர்வம், துடிப்பு, உற்சாகம் ஆகியவை படிப்படியாக குன்றிவிட்டதாகவே தோன்றுகிறது. பெண்கள் நல்வாழ்வு கருதி பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் பயனறியாது தமது பலமுமறியாது ஒரு சிலர் மட்டுமே இவற்றை தமக்கு சார்பாக மாற்றிக் கொள்ளுகின்றனர்.

எனவே சாதாரணப் பெண்கள் தமக்குரிய உரிமைகளை உணர்ந்து தமது நலனைப் பேணும் வகையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் வழி அறியாமல் இருக்கின்றனர். எனவே மனித இனத்தின் பாதியான பெண்ணினம் தன்னுள் மறைந்து கிடக்கும் ஆற்றலை அறியாது சமுதாய புத்துயிர்ப்புக்கும் அதைக் கட்டியெழுப்புவதற்கும் தனது ஆற்றலை பயன்படுத்தும் வகையறியாது திகைத்து நிற்கிறது.

பெண்கள் பற்றிய ஆய்வுகளும், அவர்களைப் பற்றிய அடிப்படை உண்மைகளின் தொகுப்புகளும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இருந்தே தொடங்கியுள்ளன. பெண்கள் தொடர்பான பல சரித்திர உண்மைகளையும், அவர்களைப் பற்றிய சமுதாய தகவல்களையும்



படிப்பகம்

padippakam

புள்ளி விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு பல சமுதாய, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதை குறித்து நடத்தப்படும் ஆய்வுகள் விசாலமடைந்து, பலபரிமாணங்களில் மாறிக் கொண்டு போகும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

இந்த ஆய்வுகள் பல நன்மைகளை பெண்ணினத்துக்கு ஏற்படுத்தியுள்ளன என்பதை நாம் உணர வேண்டும். இந்த அடிப்படையில் மேலும் பல ஆய்வுகளை மாறி வரும் சமுதாயத்தின் மாற்றங்கள் சார்பாக நடத்துவதற்கு இவை வழி வகுத்துள்ளதென்பதுவும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அந்த வகையில் பெண்கள் தொடர்பான இந்த மாற்றங்களை வெறும் சமுதாய மாற்றங்கள் என்று ஒதுக்கிவிடாது ஒரு யுகப் புரட்சி என்றே கருதவேண்டும்.



படிப்பகம்

padippakam

# மக்கள் தொடர்பியலில் மகளிர்

யுனெஸ்கோ நிறுவனம் 1975-முதல் 1985க்கு இடைப்பட்ட பத்தாண்டு காலத்தை சர்வதேச பெண்கள் தசாப்தமாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள சமூக அறிவியலாளர், ஆய்வாளர்கள், கணக்கெடுப்பாளர்கள் பெண்களின் நிலைமை குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வுகளின் முடிவுகளும், விளைவுகளும் பெண்களின் மேம்பாட்டுக்காக பல வழிகளை அமைத்துத் தந்துள்ளன. இவற்றை உலகறியச் செய்வதற்கு திறமையான நுட்பமொன்று இன்றியமையாததாகிறது. இதனை உருவாக்குவதில் வெகுஜன சாதனங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் பெரும்பங்கு வகிக்கிறார்கள். அவர்களின் கையிலேயே பெண்களை சக்தி வாய்ந்தவர்களாக வெளிக்காட்டப்படுவதும், திறமையின் இருப்பிடமாக உணர்த்தப்படுவதும் தங்கியுள்ளன.

பெண்களை வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் அறிமுகப்படுத்துவதை அறிந்துகொள்வதற்கு முன்பு வெவ்வேறு அத்தகைய ஊடகங்களின் அமைப்பியல் முறைகள், அவற்றிற்கிடையே காணப்படும் செயல்பாட்டியல் வேறுபாடுகள், அரசின் தொடர்பியல் கொள்கைகள், திட்டங்களுக்கும் சமுதாய மதிப்புகள் மற்றும் அமைப்புகள், முறைகளுக்கிடையேயான தொடர்புகள்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகிறது.

பெண்களின் நிலைமையை மேம்படுத்துவதில் உள்ள மிகப் பிரதானமான முட்டுக்கட்டை வெகுஜன ஊடகங்களில் பெண்களைப் பற்றிய தவறான அறிமுகமேயாகும். அதிலும் குறிப்பாக பெண்கள் அரசியல், பொருளாதார, வீட்டுப் போக தேவைகளுக்கான முக்கிய பிரச்சார அம்சமாகவே பயன்படுத்தப்படுகின்றனர். இதற்கு காரண



படிப்பகம்

மாக இத்தகைய ஊடகங்களை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்போரை சுட்டிக்காட்டலாம். வெகுஜனத் தொடர்பு ஊடகங்களை இலாபம் தரக்கூடிய தொழிலாக அன்றி சமூக பொறுப்புணர்ச்சியுள்ள ஒன்றாக நினைக்க மறுக்கிறார்கள் இவர்கள். அதனால் வெற்றிகரமான வியாபாரம் கருதி பெண்களை தவறாகப் பிரதிபலிக்க முன்வந்து பெண்கள் பற்றிய மாறான கருத்துக்களை மக்கள் மத்தியில் தூவி விடுகிறார்கள். எந்த நேர்க்கங்களுக்காக வெகுஜன சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அவற்றின் திசை மாறி தமது இலாபம் ஒன்றே குறிக்கோளாக மாறியிருப்பது வருத்தத்துக்குரியதே. இது இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கிலும் ஒரே நிலையில் இருப்பதும் உண்மை.

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் 'பெண் மாதிரிகளை' (Models) தமது தேவைகளுக்கேற்ற வகையில் உருவாக்கி ஒரு தவறான முன்மாதிரியை முன் வைத்துள்ளன. பெருமளவில் பயன்படுத்தப்படும் பொருட்கள், அதன் சார்பான வாழ்க்கை முறை, அதன் காரணமாக ஒரு கலாச்சார உருவாக்கம் ஆகியவற்றினைச் சார்ந்து இந்த 'மாதிரி' அமைந்துள்ளது. பல நிலைகளில் காணப்படும் பெண்களின் தொழிற்பாடுகளை வைத்தே இந்த மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நுகர்வோராகவும், குடும்பத்தின் முக்கிய மையமாகவும், மனைவியாகவும் அதிக பயன் தரக்கூடிய மலிவான தொழிலாளியாகவும், வெகுஜன சாதனங்கள் தரும் கலாசார மதிப்புகளையும், விளம்பரங்களையும் செய்திகளையும் கலாச்சார பண்புகளாக அப்படியே வழங்குகின்றன. அவற்றை பாதிப்பின் மூலமாக ஏனைய சமூக அங்கத்தவர்களுக்கு வழங்கக் கூடியதாகவும், நுகர் பொருட்களை பிரபலமாவதற்குரிய சிறந்த காரணமாகவும், பயன்படுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான சூழ்நிலையில் ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் அதன் நிலைத்த தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் உடனே அதனை பாதித்து சாதகமான சூழ்நிலையை மீட்டுத் தர உதவும் கையிருப்பில் உள்ள அரசியல் சக்தியாகவும் மட்டுமே இந்த 'பெண் மாதிரிகள்' பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய மாதிரி பெண்களை மட்டுமே வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அடையாளம் காட்டி வருவதனால் ஒரே தன்மையான ஆண்களுக்கு அடங்கிய, ஆண்களில் தங்கியுள்ள பெண்ணை மட்டுமே சமுதாயம் காணவும், பின்பற்றவும் வழி வகுக்கிறது.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் சமூகப் பொறுப்பு வாய்ந்தவை மட்டுமல்ல. வெகுஜன கருத்தை வளர்க்கவும், மாற்றவும், உருவாக்க

padippakam

வும் வல்லவை. பொது மக்கள் முடிவெடுப்பதற்கு, உள்ளதை உள்ள வாறு சொல்ல வேண்டிய கடமையும் மிக்கவை. எனவே பெண்கள் பற்றிய ஒரு கற்பனைக் கருத்தை பொருளாதார இயல்புகளிக்காக படைக்காமல் உண்மையான சரியான பிரதிபலிப்பை வெளிப் படுத்த வேண்டும். அப்போதுதான் ஒரே தன்மையான பெண்கள் சமுதாயத்திலிருந்து விலகி மாற்றத்துடன் கூடிய புதுமைப் பெண்கள் பிறக்க வழி கிட்டும்.

வெகுஜன சாதனங்களுள் மிகச் சக்தி வாய்ந்ததும் ஜனரஞ்சக மானதுமான 'சினிமா' பற்றி 1975 ஜூலையில் இத்தாலியில் யுனெஸ்கோ நடத்திய கருத்தரங்கு ஒன்றிலும் இதே கருத்து வலி யுறுத்தப்பட்டுள்ளதை யுனெஸ்கோ அறிக்கை ஒன்றின் மூலம் அறி யக் கிடக்கிறது. மேலும் அந்த அறிக்கையானது, அக் கருத்தரங் கில் பங்கேற்றவர்கள், ''பெண்களை வெகுஜனத் தொடர்பு சாத னங்களாக காம ரூபங்களாக வகைப்படுத்தி காண்பிப்பதை கண்டித்து, பெண்கள் உருவகப்படுத்தப்படும் வகைகளை உலக பெண்கள் கவ னித்து அவை மனிதனால் உருவாக்கப்பட்ட ரூபங்களே தவிர சுய ரூபங்களோ அல்லது பெண்களின் அநுபவங்களின் உண்மைச் சொரு பங்களோ அல்ல என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்'' என வும் கோரியுள்ளதையும் குறிப்பிடுகிறது.

வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் காண்பிக்கப்படும் பெண் கள் தொடர்பான அம்சங்களே பெண்களுக்கு எதிரான அநீதிகளை தடுப்பதற்கு முட்டுக்கட்டைகளாக அமைகின்றன என்பதை உலகம் உணரத் தொடங்கி விட்டது.

அதே சமயம் நம் நாட்டில் ஏறக்குறைய பெண்கள் தொடர் பான அனைத்து செய்திகளுமே கிளுகிளுப்பூட்டும் உணர்வுடனும், பரபரப்புச் சுவையொன்றே முக்கிய நோக்கமாகக் கொண்டதாக வுமே அமைகின்றன. பரிவோடும், புரிந்துணர்வோடும் அத்தகைய செய்திகளை கையாளும் முறை மிகக் குறைந்து விட்டது. தன் நிலையில் தாழ்ந்து செய்தி ஊடகங்கள் விற்பனை ஒன்றே நோக்க மாக பெண்களை வியாபார உத்தியாக தம் செய்திகளில் வெளிக் காட்டத் தலைப்படுகின்றன.

இன்றைய தேவை வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் எந்த வகையில் பெண்களின் மேம்பாட்டுக்கு உதவிகரமாக, சாதகமாக உள்ளன என்று அறிந்து கொள்வதாகும். இதில் அரசு கட்டுப்பாட் டில் இயங்கும் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகிய வையும் அடங்குவன.



படிப்பகம்

padippakam

அரசு தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியன அரசின் கட்டுப்பாட்டிலும் பிற ஊடகங்களான செய்தித்தாள்கள் மாத, வார, இருவார இதழ்கள், சினிமா, விளம்பரம் போன்றவை தனியார் கைகளிலும் உள்ளன.

இவை தொடர்பான அரசின் கொள்கைகள் செய்தி பரப்பவும், அறிவூட்டவும், பொழுது போக்குக்காகவும் படைப்புகளை அளித்து மக்களின் எண்ணங்களில் நல்ல மாற்றங்களை கொண்டு வருவதாக இருந்தாலும்கூட பல குறைபாடுகளினால் அரசு சார்பான ஊடகங்கள் அறிவூட்டவும், தனியார் கையிலிருப்பவை பொழுது போக்கு அம்சங்களை கொண்டதாகவும் வெளிவரும் நிலைமை நிலவுகிறது.

இதற்கு காரணம் கொள்கை வரைமுறைகள், பொழுதுபோக்கு உத்திகள் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடாகும். தனியார் கையில் உள்ள ஊடகங்கள் வியாபார நோக்கங்களின் காரணமாக தமது வாசகர்களையும் நேயர்களையும் கவரும் வகையில் ஜனரஞ்சகமான பொழுது போக்கு அம்சங்களை அதிகமாக சேர்த்து தருகின்றன.

அகில இந்திய வானொலி நிலையம் தனது பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை 1940இல் தொடங்கியது. இன்று மாநில மொழியில் மாதர் நிகழ்ச்சிகள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை ஒலிபரப்பப்படுகிறது. இது மொத்த ஒலிபரப்பு நேரத்தில் 1.5 சதவீதமாகும். பெண் நேயர்களுக்கு அளிக்கப்படும் ஒரே நிகழ்ச்சி இதுவேயாகும். இதன் செயல்பாடு விவாதத்துக்குரியதாகும். காரணம் முதலாவதாக அரசு சாதனமான காரணத்தினால் அரசை இக்கட்டில் ஆழ்த்தக் கூடிய எந்த அம்சமும் மிகக் கவனமாக தவிர்க்கப்படுகிறது. அடுத்து பெண்கள் நிகழ்ச்சியானபடியால் பெண்களை மட்டுமே எட்டுகிறதே அன்றி பெண்கள் தொடர்பான வானொலியில் நடத்தப்படும் பெண் நிகழ்ச்சிகளை, ஆண்களின் கருத்துக்களை பாதித்து அவர்கள் பெண்களை சமுதாயத்தில் தமது சம பங்காக ஏற்றுக்கொள்வதற்கு எந்த வகையிலும் வழி வகுப்பதாகத் தெரியவில்லை.

இந்த மாதர் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பாரம்பரிய மதிப்புகளையும் கலாச்சார சார்புகளையுமே உள்ளடக்குகின்றன. தற்போதைய பிரச்சினைகளின் தேவைகளான சட்டபூர்வமான அந்தஸ்து, கற்பழிப்பு, வரதட்சணை, மகளிர் நிலை, பெண்களுக்கெதிரான வெகுஜனத் தொடர்பு ஊடகங்களின் துர்ப்பிரயோகம் ஆகி



படிப்பகம்

padippakam

யவை வெறும் பேட்டிகளுக்குரியவையாகவே கருதப்படுகின்றன. அவை பெண்கள் தொடர்பாக தம்மை மறுசீரமைப்பு செய்து கொள்ள ஆலோசனை வழங்குவனவேயன்றி நிரந்தரமான தீர்ப் பொன்றை வழங்குவதாகத் தெரியவில்லை. தவிர இந்த நிகழ்ச்சி கள் பெண்களுக்கு ஆர்வமுடைய அம்சங்கள் சமையலறைச் சார் பானவை அல்லது வரவேற்பறை அலங்காரம் தொடர்புடையவை என உணர்த்தி நிற்கின்றன. பெண் என்பவள் நல்ல தாயாக, சிறந்த தாரமாக, ஆசை மகளாக, பொறுப்பு மிக்க மருமகளாக மட்டுமே இருக்கக் கூடியவள் என்ற உணர்வைத் தூண்டிவிடுகின்றன. அடுத்த கொடுமை 'அழகுக் குறிப்புகள்' என்ற வகையில் இழைக்கப் படுகின்றன. இத்தகைய பெண்கள் மேம்பாட்டுக்கு வழிவகுக்காத திட்டங்கள் பல. இவை பழைய மதிப்புகளை மீண்டும் பெண்கள் மீது சுமத்தி நிற்கின்றன. அத்துடன் அவர்கள் மேன்மையான இலக்குகளை நோக்கி நடைபோடுவதையும் தடுக்கின்றன.

மிகக் குறுகிய கால கட்டத்துக்குள் மக்களை வேகமாகவும், தீவிரமாகவும் எட்டி விட்ட தொலைக்காட்சி பெண்களை மிகத் தவறாக பிரதிபலித்து சமுதாயத்தில் அவர்களுக்கு தவறான நிலை யினைத் தந்துவிட்டது. வீட்டுப் பணிகளில் ஈடுபட்டு இருப்பார்களை, அடங்கிப் போகும் பெண்களையும், கவர்ச்சிப் பொருட்களாக உடல் காட்டி நிற்போரையுமே தொலைக்காட்சி வர்த்தகத் தயாரிப்புகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

அநேகமான நிகழ்ச்சிகளில் பழங்கால கருத்துக்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன. பெண்களின் பல்முனை ஆற்றலோ பல்திறமைப் பண்போ வெளிக் கொண்டுவரப்படவில்லை என்பதே பொதுவான கருத்தாக அமைய முடியும்.

தமிழ் நாட்டில் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று சார்ந்து அமைகின்றன. இது வானொலிக்கு பின் னர் வானொலியின் வழித்தோன்றலாக தொலைக்காட்சி பிறந்த காரணத்தினால் இருக்கக்கூடும். இவற்றில் மகளிர் நிகழ்ச்சிகள் போட்டிகள், சாதனையாளருடன் கலந்துரையாடல், பொழுது போக்கு கலை, அழகுக் குறிப்புகள், வீட்டுபயோகக் குறிப்புகள், சமையலறை குறிப்புகள், அன்றாட ஆடை நாகரீகங்கள் என்பவற்றை ஊக்குவிப்பதாகவே அமைகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் மேலும் ஒரே தன்மையான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதாக அமைவதுடன் அவர்கள் அறிவு ஜீவிகளாக, நல்ல புரிந்துணர்வுடன், அறிவை பரந்துபடச் செய்து தம் நிலையிலிருந்து உயர வழி வகுப்



படிப்பகம்

padippakam

பதாக இல்லாமலும் அமைகின்றன. இதனால் அவர்கள் மேன்மையடைய வழி பிறக்காமலேயே போகின்றது.

பொதுஜனத் தொடர்பு சாதனங்களில் மிகச் சக்தி வாய்ந்ததும் சாதனை மிக்கதும் சினிமாவாகும். தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் போலல்லாது சினிமாவுக்கு பொழுதுபோக்கு ஒன்றே பிரதான நோக்கமாகிறது. அறிவூட்டுவதும் செய்தி பரப்புவதும் தற்போது இரண்டாம் பட்ச நோக்கமாக மட்டுமே அமைகிறது.

சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட கதைத் திரைப்படங்களை இந்தியா இதுவரை தயாரித்துள்ளது. இதை உலக சாதனையென்று சொல்லலாம். இந்தியத் திரைப்படம் பற்றிய ஆய்வொன்று சுமார் 46 பெண் கதாபாத்திரங்களில் பன்னிரண்டு பேர் மட்டுமே வெளியில் வேலை பார்ப்போராகவும் ஒன்பது பேர் பாரம்பரிய தொழில்களை பார்ப்பவராகவும் ஏனையோர் வீட்டுப் பறவைகளாகவும் இருப்பதாகவும் படைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளதாக யுனெஸ்கோ நிறுவன Many Voices One World என்ற நூல் அறியத் தருகிறது. அரசு இந்தியத் திரைப்படத் துறைக்கு வழங்கும் நிதி மற்றும் சுதந்திரத்தையும் அதன் ஆற்றலையும் இந்தியத் திரைப்படத்துறை சரியாகப் பயன்படுத்துவதில்லை. அத்துடன் பெண்களை மரியாதைக்குரிய கோணத்தில் வெளிக்காட்டத் தவறி தரம் தாழ்ந்து நிற்கின்றது.

புராண வாழ்வையே மீண்டும் மீண்டும் பெண்கள்மீது திணிக்கும் இந்திய வெள்ளித் திரை அவர்களுக்கு மேம்பாட்டு வழிகளை காட்டத் தவறி விடுகிறது. இதைவிட மிகக் கேவலமானது பெண்களை கவர்ச்சிப் பொருட்களாக ஆபாச இலக்குகளாக காட்டி வியாபார இலாபங்களை ஈட்டுவதாகும். அண்மைக் காலத்தில் இந்தப் போக்கு மாறி வருவதும் காணக் கூடியதாக உள்ளது. பெண்கள் வித்தியாசமான கதாபாத்திரங்களாக வடிக்கப்பட்டு வருகின்றனர் என்பதும் உண்மை. ஆனால் இந்த சதவீதம் புறக்கணிக்கத்தக்க அளவே உள்ளது. இவைவிட மிகப் பூதாகாரமான வீதமாக துர்ப்பிரயோகமானதாக சித்தரிக்கப்படும் பெண் கதாபாத்திரங்கள் அமைந்துள்ளன.

ஏனைய மாநிலங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு தமிழகமும் திரைப்படத் துறையில் மிக வேகமாக முன்னேறியுள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை திரைப்படங்களை பொழுதுபோக்கு சாதனங்களாகவே தமிழகம் படைத்து வந்துள்ளது.



படிப்பகம்

padippakam

அப்போது சமுதாய உணர்வுகளை தட்டியெழுப்ப இந்த சக்தி வாய்ந்த சாதனத்தை பயன்படுத்த ஸ்ரீதர், பாலச்சந்தர், பாலு மகேந்திரா, பாரதிராஜா போன்ற புதுமை விரும்பிகள் புதிய கோண சிந்தனைகளை தமது திரைப்படங்களில் புகுத்தினர். அண்மைக் காலங்களில் இந்த சூழ்நிலை மாறி சமுதாய சீர்திருத்த கருத்துக்களை சம்மாடடியால அடித்ததுபோல சரியான இலக்குடன் புகுந்த பாரதிராஜா, பாக்கியராஜ். கே. ரங்கராஜ் போன்ற பலரும் முனைந்துள்ளனா. தமிழ் திரைபபட வரலாற்றில் பழைமைக் கருத்துக்கள் களையப்பட்டு புதுமை உணர்வு பாய்ந்தோட காலம் பிறந்தது. ஜாதிக் கொடுமை, பெண் விடுதலை, சம உரிமை போன்ற பல அம்சங்கள் சரியான் முறையில் தெளிவுபடுத்தப்படத் தொடங்கின.

புரட்சிகரமான கருத்துக்கள் பூக்க ஆரம்பித்தன. அவை மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டன. பெண்களின கருத்துக்கள் மாறி வருவதையும், அவர்கள் ஆண்களுக்கு சரிநிகரானவர்கள் என்பதையும் தமிழ் திரைப்படங்கள் சித்தரிக்கத் தொடங்கின. இத்தகைய திரைப் படஙகளில் குறிப்பிடத்தக்கவை. பொண்ணு புடிச்சிருக்கு, அச்சமில்லை அச்சமிலலை, புதுமைப பெண், வீடு போன்ற திரைப்படங்கள் பழைய கருத்துக்களை பரண்மேல் ஏறறி விட்டு புதுமைப் பாதையை பெண்களுக்கு செப்பனிட்டு தர முயனறு வெற்றிகண்டுள்ளவை. பெண்களின் அறியாமையை அகற்றி, மூடத்தனமான சமுதாய கட்டுப்பாடுகளை அறுத்தெறிந்து அவர்களை தைரியசாலிகளாக அறிமுகப்படுத்தும் இப்படஙகள தமிழக திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவை என்பதே சரியாகும்.

அதே சமயத்தில் தமிழ் திரைப்படங்களின் மறுபக்கத்தையும் பார்க்கவேண்டியுளளது. இவை இன்னொரு புறத்தில பெண்கள் முதுகில் குத்தும்பணியைச் செய்துகொண்டுதான இருககின்றன. பெண்களை கவர்சசிப் பொருட்களாகவும போகப் பொருட்களாகவும் நினைக்கத் தூண்டும் காடசிகளையும் தமிழ் திரைப்படங்கள் குறைத்துக்கொண்டபாடாகத் தெரியவில்லை. ஆபாச கதாபாத்திரங்களையும, ஆபாச வசனங்களையும், பாடல்களையும் புகுத்தி பெண்களை இழிவுபடுத்தும் பணியையும் தமிழ் திரைப்படங்கள் கைவிடவில்லை.

இவற்றிலிருந்து சமுதாய மாற்றத்தில் வெகுஜன தொடர்பு சாதனங்கள் ஆற்றும் அளப்பரிய பங்கினை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். வளர்ந்து வரும் தொழில்நுட்ப மாற்றங்களின் அடிப்படையில் கம்பியூட்டர், செயற்கை கோள் உதவியுடன் முன்னேறிக் கொண்டிருக்கும் வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் தமது பொறுப்பை



படிப்பகம்

padippakam

உணர்ந்து நடக்காத பட்சத்தில், தமது பாதையை சரியான திசையில் மாற்றிக் கொள்ளாதவரை சமுதாய மேம்பாடு படுகுழியில் தள்ளப்படும் அபாயம் உள்ளது.

தற்போதைய இதழ்களில் வாசகர்களை கவர்ந்திழுக்கும் ஒரே அம்சம் பெண்களின் கவர்சியாகவே கருதப்படுகிறது. சமுதாய குற்றங்களும், அசம்பாவிதங்களும், கற்பழிப்பு, பெண்களை நையாண்டி செய்வது, வரதட்சணை சாவுகள், தற்கொலைகள் ஆகியவை பரிந்துணர்வுடன் நோக்கப்படுவதில்லை. மாறாக கிளுகிளுப்பூட்டும் அல்லது பரபரப்பூட்டும் வியாபார வளர்ச்சிக்கு துணைபோகும் செய்தியாகவே இவை கருதப்படுகின்றன.

பெண்களுக்கென நடத்தப்படும் பத்திரிகைகள்கூட தங்கள் பக்கங்களை சமையல் குறிப்புகள், ஆடை ஆபரண நாகரிகம், அழகுக் குறிப்பு, ஆடை வடிவமைப்பு என பெண்களை குறுகிய வட்டத்துக்குள் செக்கு மாடுகளாகச் சுழற்றும் அம்சங்களையே அள்ளி வழங்குகின்றன. பெண் பிரச்சனைகளை அலசுவதும் அவர்களின் அடிப்படைத் தேவைகளில் ஆர்வம் காட்டுவதும் இப்பத்திரிகைகளில் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன. அவர்களின் சமுதாயப் பங்குபற்றி இப்பத்திரிகைகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அதே சமயம் பத்திரிகைகளின் சமுதாயப் பங்குபற்றி அவை சிந்தித்ததாகவும் தெரியவில்லை.

மக்களுக்குத் தேவையானதென பத்திரிகைகள் தீர்மானிக்கும் விஷயங்களையே மக்களின் அறிவுப்பசிக்குத் தீனியாகக் கருதி மக்கள் மீது தம் கருத்தை வியாபார ரீதியாகத் திணிக்கின்றன. நமது பத்திரிகைகள் குறிப்பாக தமிழ் பத்திரிகைகள் பெண்களுக்கு எதிராக அழைக்கப்படும் சமூக கொடுமைகளை சிறந்த பொழுதுபோக்கு காரணமாக கருதி வெளியிட்டு பெண்களை எழுத்தால் கொச்சைப்படுத்தும் செயலில் ஈடுபட்டு வருகின்றன. மிக அதிகமாக வரும் செய்திகளான காஸ் சிலிண்டர் வெடித்து மரணம், வரதட்சணையால் தீக்குளிப்பு போன்ற செய்திகள் அவற்றின் ஆழம் குறித்து தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. மாறாக விற்பனை முக்கியத்துவமாக கருதப்படுகின்றன.

எந்த ஒரு செய்தி ஊடகமானாலும் அது விளம்பரங்களில் பெருமளவு தங்கியிருக்கின்றது. குறிப்பாக அச்சு ஊடகம் (Print Medium) தனியார் கரங்களில் இருப்பதனால் விளம்பரங்களில் பெருமளவு தங்கியிருக்கிறது. அதே சமயத்தில் தொண்ணூறு சதவீதப்



படிப்பகம்

padippakam

பத்திரிகைகள் பெருமளவு பெண் வாசகர்களில் மட்டுமே தங்யிருப்ப தாக பல ஆய்வுகள் முடிவுகளை தந்துள்ளன. பெண்கள் பத்திரிகை கள் அல்லாத பல பத்திரிகைகள் பெண் வாசகர்களை கவரும் அம் சங்களை மட்டுமே உள்ளடக்கி விடுகின்றன. வீடுகளிலும், அலுவல கங்களிலும் இருக்கும் பெண்கள் படிக்கக்கூடிய அம்சங்களை நிறைய சேர்த்து பத்திரிகைகள் உருவாக்கப்படுவதால் ஒரு குறிப்பிட்ட வட் டத்தை விட்டு வாசகர்கள் வெளியேற முடியாமல் பழைமை விலங் குகளில் கட்டுண்டு கிடக்கின்றன. எனவே ஒரு சமுதாய வளர்ச் சிக்கோ மாற்றத்திற்கோ வித்திட முடியாமல் பத்திரிகைகள் தோற் றுப்போய் நிற்கின்றன. எனவே அவற்றைப் படிக்கும் பெண்களிடை யேயும் எந்தவித கருத்து மாற்றமோ, நோக்கங்களில் உயர்வோ, அல்லது செயல்பாட்டில் வித்தியாசமோ ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. 'ஒரே தன்மையான' வாழ்க்கையில் ஈடுபடும் நிர்ப் பந்தத்துக்கு பெண்கள் தள்ளப்படுகிறார்கள். அத்துடன் அவர்கள் அந்த வாழ்க்கை முறைக்கு அடிமையாகியும் போகிறார்கள். இந்த வாழ்க்கைக்கு விளம்பரங்கள் பெருமளவு துணை போகின்றன. பல விளம்பரங்கள் ஆங்கில பிரதியின் தமிழாக்கமே. அப்படி இல்லை யெனில் தமிழ் கலாச்சாரத்தையொட்டி பிரதிகள் சிறிது மாற்றத் துக்குள்ளாக்கப் படுகின்றன. எப்படியாயினும் பழைய மரபுகளை யொட்டிய பழக்க வழக்கங்கள் மீள் திணிப்பு செய்யப்படுகின்றன. அல்லது அத்தகைய மரபுகள் திரிபுபடுத்தி திணிக்கப்படுகின்றன. இந்த மரபுகள் எவையுமே புதிதாக புத்தெழுச்சியூட்டுவதாக இல்லை என உறுதியாகக் கொள்ளலாம். வீட்டைச் சுற்றிய ஒரு வாழ்வே பெண்களின் பிரதானமான வாழ்க்கை என்பதை நேரடியாக அல்லது மறைமுகமாக வலியுறுத்துவதாக இந்த விளம்பரங்கள் உள்ளன. குறிப்பாக புடவை விளம்பரங்கள் மற்றும் குடும்பத்துடன் தொடர் புடைய பொருட்களை விற்பனை செய்யும் விளம்பரங்களில் எவ்வள வுக்கு எவ்வளவு பெண்களை பழைய காலத்துக்கு இழுத்துச் செல்ல முடியுமோ அதைச் செய்கிறார்கள். கபில்தேவ் ஒரு சாதனையாளர் என்ற முறையில் 'பூட்ஸ்' விளம்பரத்துக்கு பயன்படுத்தப்படுகிறார். இது போலவே பல ஆண் சாதனையாளர்கள் விளம்பரங்களில் தலை காட்டுகிறார்கள். ஆனால் பெண் சாதனையாளர்களில் சினிமா நட் சத்திரங்களைத் தவிர ஏனையோர் பயன்படுத்தப்படுவதில்லை. கவர்ச்சி மட்டுமே பெண்களின் மூலதனம் என விளம்பரங்களைவிட விளம்பர அமைப்பாளர்கள் கருதுவதாக கொள்ளவேண்டி இருக்கி றது. குறிப்பாக தமிழ்நாட்டில் எந்த ஊடகத்திலும் பெண் சினிமா நட்சத்திரங்களுக்கு இருக்கும் வரவேற்பு வேறு சாதனையாளர்களுக்கு இல்லை என்றே சொல்லலாம். இந்த நிலையே இலங்கையிலும் நிலவுகிறது.



படிப்பகம்

padippakam

மகளிர் மேம்பாட்டில் ஆர்வம் மிக்க பல அமைப்புகள் இந்த கவர்ச்சி வியாபாரத்தை உற்றுநோக்கி வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு புதுதில்லியில் நடந்த ஆசிய விளம்பர காங்கிரஸ் மாநாட்டில் இரு முக்கிய மாற்றங்கள் நடந்தன. முதலாவதாக விளம்பரச்செய்தி அல்லது உருவங்களில் பெண்கள் இழிவாக காண்பிக்கப்படுவதையும் இரண்டாவதாக பெண்களை இவற்றில் பயன்படுத்துவதையும் குறித்த மாற்றங்கள் அவை.

அலங்காரமான, பாலியல் கூறுகளாக பெண்கள் பொருட்களை விற்பனை செய்வதற்காக தம்மைக் காண்பிக்கும் அல்லது சமையலறைநாயகியாக, குடும்ப சுமைதாங்கியாக பிள்ளை பராமரிக்கும் இயந்திரமாக மனிதனின் அடிமையாக இவர்கள் வெளிக்காட்டப்படுவதை இந்த காங்கிரஸ் கண்டித்துள்ளது.

விளம்பரங்களில் பெண்கள் பற்றிய இரண்டுவித வெளிப்பாடுகளே இருந்துவந்திருக்கின்றன. ஒன்று கவர்ச்சித் தோற்றம். அடுத்தது குடும்பப் பெண்களின் வீட்டுத் தேவைகள். இவற்றை ஆடம்பரப் பொருட்களையும், குடும்ப நுகர் பொருட்களையும் விற்பனை செய்வதற்கு தேவைக்கு ஏற்ற மாதிரி விளம்பரதாரர்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்; வருகின்றனர்.

கவர்ச்சியை பெண்கள் தொடர்பான பொருட்களுக்கு மட்டுமன்றி ஆண்களின் நுகர்பொருட்களுக்கே பயன்படுத்தி வந்திருக்கின்றனர்; வருகின்றனர்,

ஷேவிங் கிரீம், ஷு பொலிஷ், பிளேடுகள், ஆண்களுக்காக ஆடை வகைகள் போன்றவற்றுடன் பல விளம்பரங்களில் பெண்கள் மாடல்களை காணக் கூடியதாக உள்ளது. இது பெண்களிடையே ஒரு தவறான கருத்தையும் விதைக்கவல்லதாக உள்ளது அதாவது 'அழகாக இருப்பதே' பெண்களின் வாழ்க்கையில் மிக முக்கிய நோக்கம் என்ற எண்ணத்தை பல பெண்கள் எட்டுகின்றனர்.

குடும்பப் பெண்களின் பங்காக அவர்கள் ஆர்வமெல்லாம் நல்ல சமையல் பொருட்கள், வீட்டுபயோகப் பொருட்கள், ஆடைகள் சுத்தமான எண்ணெய் சிறந்த சோப்பு, சலவைத் தூள் இவற்றை சுற்றியே பின்னிவிடப்பட்டிருக்கிறது. தவிர நல்ல முடிவெடுக்கும் திறமையும், நிர்வாகத் திறமையும் படைத்தவர்களாக பெண்கள ஒரு போதும் உணர்த்தப்படுவதில்லை, நிதி வங்கி மற்றும் முதலீட்டு செயல்பாடுகளில் பெண்கள் ஈடுபடுபவர்களாகவும் உணர்த்த முன் வருவதில்லை!

எனவே விளம்பரங்களின் செய்திகள் பெண்கள் கவருவதற்குப் பயன்படும் ஒரு பொருள்' என்பதையே (சுட்டிக் காட்டுகின்றன.



படிப்பகம்

padippakam

இதையே யுனெஸ்கோ அறிக்கையொன்றும் ''விளம்பரங்களில் வருகிற பெண்கள் எப்போதுமே இளமையானவர்களாகவும், கவர்ச்சிகரமாகவும் இருக்கின்றனர். பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் கவர்ச்சிப் பொருட்களாக மட்டுமே காண்பிக்கப்படுவது தவிர அறிவு ஜீவிகளாக இருப்பது ஆண்களாக இருப்பதெனவே நினைக்கத் தூண்டுகின்றன'' எனக் கூறுகிறது.

இத்தனையையும் தெளிவுறுத்திய பின்னும் செய்தி ஊடகங்கள் பெண்களைப் பொறுத்தவரை நியாயமான பங்கை ஆற்றவில்லை என்று சொல்லலாம். அவர்களுடைய ஆற்றலை வெளிப்படுத்தவும் சமுதாயத்தில் அவர்களின் பங்கை சரிவரச் செய்வதற்கும், அவற்றை வெளிக் கொண்டு வருவதற்கும் ஊடகங்கள் துணைபோகவில்லை எனவும் தெரிகிறது.

ஊடகங்கள் சமுதாய யதார்த்தங்களை பிரதிபலிப்புடன் சமுதாயத்தில் ஓங்கியுள்ள சில முரண்பாடுகளையும் சீர் செய்யவேண்டிய கடமையும் கொண்டவை. தவிர அவை எண்ணங்களை ஊடுருவவும் கருத்துகளை சீர்படுத்தவும் வல்லன. இத்தகைய சக்தி படைத்த செய்தி ஊடகங்கள் பெண்களுக்கு முழு மேம்பாடு கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளை ஒருங்கிணைக்க முன் வந்திருக்கும் சர்வதேச பெண்கள் பத்தாண்டு முடிந்த பிறகும்கூட அதற்கான தமது பங்கை ஆற்ற முன்வரவில்லை என்றே கொள்ளவேண்டியுள்ளது. இந்த நிலைமை மாற வேண்டும்.

ஊடகங்கள் மட்டுமே இதற்கு பொறுப்பு என்று கூறிவிட முடியாது. அந்த மாற்றம் முழு சமுதாயத்திலும் தங்கியுள்ளது. மொத்த சமுதாயமும் விழிப்புணர்வோடு இந்த மாற்றத்துக்கான முயற்சிகளில் ஈடுபட்டாலன்றி ஒரு சமுதாயப் புரட்சி பெண்கள் நிலையில் தோன்ற முடியாது.

செய்தி ஊடகங்களில் பெண்களின் நிலைபற்றிய ஒரு கண்ணோட்டத்தை இந்த அத்தியாயம் தெளிவுபடுத்த முனைந்துள்ளது. அடுத்து வரும் பக்கங்கள் தமிழ்நாட்டில் செய்திப் பத்திரிகைகளில் பெண்கள் நிலைமை பற்றிய ஒரு பொதுக் கருத்தை வெளிப்படுத்தி அவர்கள் தலையெழுத்தை நிர்ணயிப்பதில் இப்பத்திரிகைகள் ஆற்றும் பங்கு பற்றி விளக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

செய்திகள், விளம்பரங்கள், கட்டுரைகள், தலைப்புகள், புகைப்படங்கள், வரைபடங்கள் மற்றும் பெண்களோடு தொடர்புடைய பல்வேறு அம்சங்களும் பல பிரபல பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.



படிப்பகம்

padippakam

# திரைகளை விலக்குவோம்

சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலத்தில் நமது சமுதாயத்தில் பெண்கள் நிலை மேம்பட்டே வந்துள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அதற்காக பத்திரிகைகள் தாம் ஆற்ற வேண்டிய பங்கை செய்திருக்கிறதா என்றால் அதில் அவை தவறி விட்டன என்றே சொல்லலாம். பெண்களின் உண்மை நிலையை உணர்த்தவும், அதை மேலும் உயர்த்தவும் பத்திரிகைகள் தவறி விட்டன. இதை நிரூபிக்க முந்தைய பக்கங்கள் பெருமளவில் பக்க பலமாக இருக்கின்றன.

தனிப்பட்ட எந்தவொரு வெகுஜனத் தொடர்பு சாதனத்தினதும் முதன்மை நோக்கு வியாபார பெருக்கமே என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் சமுதாயத்தின் மதிப்பையும், கோட்பாடுகளையும் குலைத்துத்தான் இந்த பெருக்கம் அமையவேண்டுமென்பதில்லை. பெண்களை இழிவுபடுத்தியோ, அடிமைப்படுத்தியோதான் இதைச் சாதிக்க வேண்டுமென்பதில்லை. ஒரு காலத்தில் பெண்களுக்கு நியாயமாக வழங்கப்பட்ட சமத்துவம், உரிமைகள், சமுதாயப் பங்கு ஆகியவை அங்கீகரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்கு வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் தம் பங்கை சரிவர ஆற்ற வேண்டும்.

பெண்கள் தம்மைப்பற்றி தவறான கருதுகோள்களையும், எதிர் மறையான எண்ணங்களையும் வளர்த்துக் கொள்ள நமது செய்தி சாதனங்கள் துணை போகின்றன. அவர்கள் தமது சக்தியையும், சமுதாயத்தில் தமது வல்லமையையும் உணர்ந்து செயல்படுவதற்கு மாறான விளைவுகளை இவை ஏற்படுத்துகின்றன.

பெண்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் பணிந்து போதல், அடிமைப்படுத்துதல் இரண்டாம் பட்சமாக கருதுதல் போன்ற பழங்காலத்து பண்புகளைக் காட்டி முடக்கிப்போடும் முயற்சிகளில் பெண் பாத்திரங்களை சித்தரிக்கவே வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் முயன்று வந்திருக்கின்றன.

எனவே இன்றைய உண்மை நிலையை எடுத்துக்காட்ட ஊடகங்கள் தவறிவிட்டதுடன் சமுதாய மாற்றத்துக்கோ மேம்பாட்டுக்கோ வழிகாட்டவும் தவறிவிட்டன. மேம்பாட்டு செய்திகளை



படிப்பகம்

padippakam

யும், உணர்வுகளையும் ஊட்டாத காரணத்தினால் பத்திரிகைகள் சமுதாய மேன்மையில் தமக்குரிய கடமையை ஆற்றாமல் விட்டு விட்டன.

"பெண்களை முற்றிலுமாக ஒருங்கிணைந்து மேம்பாட்டு திட்டங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்'' என்ற ஐக்கிய நாடுகளின் சர்வ தேச மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் தமிழகமும், பாரதமும் தம் பங்கை அரசு மூலமாக ஆற்ற முன்வந்திருக்கின்றன. பல மேம்பாட்டு திட்டங்களை அறிவித்தும் இருக்கின்றன.

தமிழ் சமுதாயத்தில் பாரம்பரிய பழக்கங்களை மீறி பெண்கள் வெளிப்படுவது மிகச் சிக்கலானதே. அதற்குரிய வழிமுறைகளை ஈடுபடுத்துவதும் சிரமமானதே. வெறும் பாலியல் சின்னமாக மட்டுமே பெண்களைக் கருதும் பலரின் மத்தியில் பெண்களின் ஆற்றலை அனைத்து கோணங்களிலும் வெளிக்கொணர்வது வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் கடமையே.

இதை பத்திரிகைகள் சிறப்பாக செய்யமுடியும். அதன் சக்தி முற்றிலுமாக பெண்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு குவிக்கப்பட்டால் மக்களை ஊடுருவி அவர்களின் மனங்களை மாற்றும் வல்லமை உள்ளது. எண்ணங்களையும் கருத்துக்களையும் புதிய வடிவில் பெண்கள் முன்னேற வழி வகுக்கும் வகையில் மாற்றவும் சமுதாயத்தை சரியான திசையில் நடைபோடச் செய்யவும் தனது படைப்புகளை மாற்றியமைத்து வெற்றி காணக்கூடிய வாய்ப்புக்கள் செய்தி ஊடகங்களிடையே பத்திரிகைகளுக்கு அளப்பரியதாக உள்ளது.

அந்த மனப்பான்மையுடன் பெண்களை கைதூக்கிவிட பத்திரிகைகள் மனமுவந்து முன்வர வேண்டும். அத்தகைய முயற்சிகளை அரசுகள் அங்கீகரிப்பதுடன் அவற்றுக்கு தகுந்த ஊக்கமும், ஆதரவும் அளிக்கவும் முன்வரவேண்டும். இதில் அரசு மட்டுமே ஈடுபடாது ஏனைய பொதுநல அமைப்புகள், சமூகநல அமைப்புகள் மகளிர் மேம்பாட்டில் ஆர்வம் கொண்ட அமைப்புகள், மற்றும் நிதி வசதி படைத்த தனியார் அமைப்புகள் ஆகியனவும் தம் பங்கை உவந்தளிக்க வேண்டும்.

வர்த்தகமயமான வெகு ஜனத்தொடர்பு உலகில் பெண்களை தவறாக சித்தரிப்பதற்கு முற்றிலும் எதிரான நடவடிக்கைகளை எடுப்பதென்பது முடியாத காரியமே. ஆனாலும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் முன்னதாக வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தம் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயல்படுமாறு செய்ய முயற்சி செய்வது நமது கடமையாகிறது. அத்தகைய பொறுப்பை உணர்ந்து செயல்படுவது அவர்களின் கடமையும் ஆகும்.



படிப்பகம்

padippakam

இந்திய சரித்திரத்தில் வெகுஜனத் தொடர்பின் நிலையை நோக்கினால் ''மூன்றாவது உலக நாடுகளில் இந்தியாவில் மட்டுமே வெகுஜனத் தொடர்பு பற்றிய கருதுகோள்களும், தத்துவங்களும் மிகச் சிறப்பாக மேம்பட்ட நிலையில் இருப்பதாக'' வெகுஜனத் தொடர்பு பற்றிய யுனெஸ்கோ பதிப்பொன்றில் கிளமென்ட் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். இது பெருமைக்குரிய ஒரு விஷயம்தான். அத்தகைய ஒரு சிறப்பான பின்னணியில் நமது இலக்கை மகளிர் மேம்பாடு நோக்கி திசை திருப்பி வெற்றி காண்பது மிக சிரமமான பணியல்ல.

எத்தனையோ வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமது வாழ்வு திருமணத்தில் நிறைவுறுவதாகவே கருதி நமது பெண்கள் தாமாகவே விரும்பி, தமக்குரிய சலுகைகளையும், உரிமைகளையும் சமத்துவத்தையும் விட்டுக்கொடுத்துவிடுகின்றனர். அதையே தமது வாழ்வில் நோக்காகவும், மகிழ்ச்சியாகவும் கருதுகின்றனர். இந்த சிறப்பம்சம் தமிழ் பெண்களின் தனிக் குணமாகும். பாரதப் பெண்களின் பாரம்பரியமாகும். இதனால் அவர்களின் முன்னேற்றம் எதிர் பார்ப்பதற்கு மாறான விளைவுகளையே தந்துள்ளது. இதற்குரிய பல காரணங்களில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பெண்களின் பிரதிபலிப்பும் ஒன்றாகும். இல்லத்தரசியாக இருப்பவர்களையும், பாரம்பரிய பண்புகளை பின்பற்றுபவர்களையும் மட்டுமே மீண்டும்மீண்டும் சமுதாய மதிப்பு பெற்றவர்களாக காண்பித்ததன் விளைவுதான் இது. தலைமுறை தலைமுறையாக இந்த தாக்கம் சமுதாயத்தில் வேரூன்றி நிலைத்திருக்கிறது. பெரும்பான்மை பெண்களான நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் இந்த தாக்கத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை. அவர்களின் படிப்பும், பதவியும் இந்தத் திரைகளை இன்றும் விலக்கி வைக்கவில்லை. அதுவரை அவர்களைப் பூட்டி வைத்துள்ள விலங்குகளும் உடையப்போவதில்லை.

பெண்கள் தாமே தமது நிலையை உணராதவரையில், உணர்ந்து தமது விட்டத்தை விட்டு வெளிவராத வரையில் எந்த முயற்சிகளும் பலனளிக்கப் போவதில்லை. அதற்கு துணையாக பொது உணர்வு தூண்டப்பட வேண்டும். சமுதாயத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றிய சரியான புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் அதற்கு இதனுடன் தொடர்புடைய அமைப்புகள் இது தொடர்பான தேவையான அனைத்து ஆய்வுகளையும் மேற்கொள்ளவேண்டும். அந்த ஆய்வுகளின் அடிப்படையில் எதிர்காலத் திட்டங்கள் அமைய வேண்டும். அந்தத் திட்டங்கள் சரியான வடிவமைப்புடன் செயலாக்கப்பட ,வேண்டும். அதன் அனைத்துக் கோணங்களும் பெண்களுக்கு சரியான முறையில் புரிய வைக்கப்படவேண்டும். இதற்கு மட்டுமன்றி பெண்களை பெண்களே உணர்ந்து கொள்ளவும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பக்கபலமாக நிற்கவேண்டும். இவற்றின் மூலமே பெண்ணடிமை தீர வழிவகுக்க முடியும்.



படிப்பகம்